பிரசார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
12 05 2026 TUESDAY 12 40 PM
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- சர்வதேச செவிலியர்கள் தினத்தை ஒட்டி, சிறந்த செவிலியர்களுக்கான விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி. திரெளபதி முர்மு இன்று புதுதில்லியில் வழங்கினார்.
- அஸ்ஸாமில் திரு. ஹிமந்த பிஸ்வா சர்மா தலைமையிலான பிஜேபி அரசு, இன்று மீண்டும் பதவியேற்றது.
- நாடுமுழுவதும் கடந்த 3 ஆம் தேதி நடைபெற்ற இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான நீட் தேர்வு ரத்து செய்யப்படுவதாக தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.
- பணிநியமன முறைகேடு புகாரின் பேரில், மேற்குவங்க முன்னாள் அமைச்சர் திரு. Sujit Bose அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்டுள்ளார்.
- ஆசிய இளையோர் குத்துச்சண்டை போட்டியில், இந்தியாவின் Rakhi இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்..

>>>>>>>><<<<<<<<

சர்வதேச செவிலியர்கள் தினத்தை ஒட்டி, சிறந்த செவிலியர்களுக்கான Florence Nightingle விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி. திரெளபதி முர்மு இன்று புதுதில்லியில் வழங்கினார்.

இத்தாலியில் பிறந்து, செவிலியர் பணியில் அர்ப்பணிப்புடன் செயல்பட்ட ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேள் பிறந்த தினம் ஒவ்வொரு ஆண்டும் மே 12ஆம் தேதி சர்வதேச செவிலியர் தினமாக கொண்டாடப்படுகிறது.

இந்த ஆண்டு செவிலியர் தினம், “நமது செவிலியர்கள் -நமது எதிர்காலம்” என்ற கருப்பொருளில் கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி புதுதில்லியில் குடியரசுத்தலைவர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், குடியரசுத்தலைவர் திருமதி திரெளபதி முர்மு, சிறப்பாக செயலாற்றிய செவிலியர்களுக்கு விருதுகளை வழங்கி கௌரவித்தார்.

இந்நாளை முன்னிட்டு, மத்திய அமைச்சர்கள் செவிலியர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், உயிர்களை காப்பாற்றுவதில் முக்கியப் பங்காற்றுவதாக தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைப்புகளை வலுப்படுத்தி, மக்களின் நலவாழ்வை உறுதி செய்வதன் மூலம், தேசத்தின் முன்னேற்றத்திலும் அவர்கள் பங்காற்றுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தன்னலமின்றி செயல்படும் செவிலியர்களை மக்கள் போற்ற வேண்டும் என்றும் திரு. ஜெ.பி. நட்டா கேட்டுக் கொண்டுள்ளார்.

உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள பதிவில், நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நம்பிக்கை தூணாக செவிலியர்கள் திகழ்வதாக குறிப்பிட்டுள்ளார்.

செவிலியர்களின் அர்ப்பணிப்பும், தன்னலமற்ற சேவையும் ஆரோக்கியமான இந்தியாவிற்கான அடித்தளத்தை அமைப்பதாக திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இந்நாளையொட்டி, நாடுமுழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாகாலாந்தின் கோஹிமாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பாக செயல்பட்ட செவிலியர்களுக்கு அம்மாநில முதலமைச்சர் திரு. Neiphu Rio விருதுகளை வழங்கி கௌரவித்தார்.

தமிழகத்தில் நெல்லை, தூத்துக்குடி, திருப்பூர் உள்ளிட்ட இடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் நெல்லை மற்றும் திருப்பூரில் செவிலியர்கள் பங்கேற்ற பேரணி நடைபெற்றது.

தூத்துக்குடியில் உள்ள அரசு செவிலியர் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சிறப்பாக பணியாற்றிய செவிலியர்களுக்கு மாவட்ட ஆட்சியர் திரு. விஷூ மஹாஜன் நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

>>>>>>><<<<<<<

அஸ்ஸாமில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு மூன்றாவது முறையாக இன்று பதவியேற்றது.

திரு. ஹிமந்தா பிஸ்வா சர்மா தொடர்ந்து 2வது முறையாக முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ளார்.

குவஹாத்தியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அவருக்கு ஆளுநர் திரு. லக்ஷ்மன் பிரசாத் ஆச்சார்யா பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

முதலமைச்சருடன் திரு. ராமேஷ்வர் தெளி, திரு. அதுல் போரா, திரு. சரண் போரோ, திரு. அஜந்தா நியோக் ஆகிய 4 அமைச்சர்களும் பதவியேற்றனர்.

நிகழ்ச்சியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் உள்ளிட்ட மத்திய அமைச்சர்களும், பிஜேபி ஆளும் மாநிலங்களின் முதலமைச்சர்களும் பங்கேற்றனர்.

>>>>>>><<<<<<<

அறிவியல் மற்றும் கணிதத்தில் இந்தியாவின் பங்களிப்பு அளப்பரியது என்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஐ.நா-வில் நடைபெறும், கணித துறையில் இந்தியாவின் பங்களிப்பு குறித்த கண்காட்சியை அவர் தொடங்கி வைத்துப் பேசினார்.

மூன்றாம் நூற்றாண்டில் இந்தியாவில் உருவான கணித முறையே, தற்போதைய டிஜிட்டல் மற்றும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் அடித்தளமாக உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச அளவில் அரசியல் மற்றும் பொருளாதார சூழலில் அறிவியல் மற்றும் கணிதம் முக்கியப் பங்கு வகிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் கடந்த பிப்பிரவரி மாதம் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு மாநாடு, இத்துறையில் இந்தியா வலுவாக உள்ளதை எடுத்துக்காட்டியதாக டாக்டர் ஜெய்சங்கர் கூறினார்.

>>>>>>><<<<<<<

நாட்டில் உள்ள சுற்றுலா தலங்களை உலக தரத்திற்கு மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

குஜராத்தின் கெவாடியாவில் இதுதொடர்பான இரண்டு நாள் பயிலரங்கை நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

*சுற்றுலா தலங்களை மேம்படுத்த மத்திய அரசுடன் மாநில அரசுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.*

*பயிலரங்கில் பேசிய மத்திய இணையமைச்சர் திரு. சுரேஷ்கோபி, சுற்றுலா தலங்களின் மேம்பாட்டிற்காக மத்திய அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு நடவடிக்கைகளை பட்டியலிட்டார்.*

*இந்த பயிலரங்கின் இரண்டாம் நாளான இன்று, தமிழகம், கர்நாடகா, சத்திஷ்கட் மாநிலங்களின் சுற்றுலா மேம்பாடு தொடர்பான பிரத்யேக அமர்வுகள் இடம்பெறுகின்றன.*

*>>>>>>><<<<<<<*

*நிலக்கரி உற்பத்தியை அதிகரிக்க தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.*

*இதுதொடர்பாக புதுதில்லியில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் பங்கேற்ற அவர், முக்கிய திட்டங்களின் செயலாக்கம் குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.*

*இத்துறையின் செயல்பாட்டை மேம்படுத்தும் வகையிலான சீர்திருத்தங்களை விரைவுபடுத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாக திரு. கிஷன் ரெட்டி தெரிவித்தார்.*

*>>>>>>><<<<<<<*

*வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. பபித்ரா மார்க்கரிட்டா, Honduras கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. Yasser Handal Carcamo-வுடன் இருதரப்பு உறவுகள் குறித்து ஆலோசனை நடத்தினார்.*

*நான்கு நாடுகள் அரசுமுறை பயணத்தின் இரண்டாம் கட்டமாக Honduras சென்ற அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில், இருநாடுகளுக்கு இடையே, கலை, திரைத்துறை, யோகா மற்றும் கலாச்சார பரிமாற்றங்கள் குறித்து ஆலோசனை நடத்தியதாக குறிப்பிட்டுள்ளார்.*

*>>>>>>><<<<<<<*

*நாடுமுழுவதும் கடந்த 3 ஆம் தேதி நடைபெற்ற இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான நீட் தேர்வு ரத்து செய்யப்படுவதாக தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.*

*இந்த தேர்வுகளில் முறைகேடுகள் நடைபெற்றதாக எழுந்த புகாரை அடுத்து, இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், மறுதேர்வு நடத்தப்படும் தேதி பின்னர்*

அறிவிக்கப்படும் என்றும் தேசிய தேர்வு முகமையின் சமூகவலைதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு, இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<<<

மேற்குவங்கத்தில் மத்திய-மாநில அரசுகள் இணைந்து செயல்பட்டு, அரசு திட்டங்களின் பலன்கள் மக்களை தடையின்றி சென்றடையும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அம்மாநிலத்தில், திரு.சுவேந்து அதிகாரி தலைமையிலான அரசு பதவியேற்ற பின்னர், மேற்கொண்ட அமைச்சரவை முடிவுகளை பிரதமர் பாராட்டியுள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், ஆயுஷ்மான் பாரத் திட்டத்தை மேற்குவங்கத்தில் செயல்படுத்துவது என்ற முடிவுக்கு வரவேற்பு தெரிவித்துள்ளார்.

மேற்குவங்கத்தில் மக்களின் நலனுக்கு புதிய அரசு உயர் முன்னுரிமை அளித்து செயல்படுவதாக அவர் கூறியுள்ளார்.

அரசின் இந்த முடிவால், உலகின் மிகப் பெரிய சுகாதார காப்பீட்டுத் திட்டமான ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் பயன்கள் இனி மேற்குவங்க மாநில மக்களையும் சென்றடையும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசின் அனைத்து திட்டங்களும் இனி தடையின்றி மாநிலத்தில் செயல்படுத்தப்படும் என்று திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

>>>>>>>><<<<<<<<

பணிநியமன முறைகேடு புகாரின் பேரில், மேற்குவங்க முன்னாள் அமைச்சர் திரு. Sujit Bose-ஐ அமலாக்கத்துறை கைது செய்துள்ளது.

கடந்த 2014 முதல் 2016ஆம் ஆண்டுவரையிலான காலகட்டத்தில் தெற்கு Dum Dum நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட பணிநியமன முறைகேட்டில் அவருக்கு தொடர்பு இருந்ததாக புகார் எழுந்தது.

இதனையடுத்து, சுமார் 10 மணி நேரம் விசாரணை நடத்திய அமலாக்கத்துறை அதிகாரிகள் பண மோசடி புகாரில் திரு. Sujit Bose-ஐ கைது செய்தனர்.

இன்று அவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும், இதுதொடர்பாக விசாரணை நடைபெற்று வருவதாகவும் அமலாக்கத்துறை தெரிவித்துள்ளது.

>>>>>>>><<<<<<<<

மஹாராஷ்ட்ரா மாநிலத்தில் காவல்துறையினருக்கான புதிய குடியிருப்புகளை கட்ட ஆயிரத்து 768 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், சுமார் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டப்படும் என்று கூறியுள்ளார்.

மக்களை பாதுகாக்கும் காவலர்களின் நலனுக்காக மாநில அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் தெரிவித்துள்ளார்.

>>>>>>>><<<<<<<<

தமிழக சட்டப்பேரவை தலைவராக திரு. ஜே.சி.டி. பிரபாகரும், துணைத் தலைவராக திரு. ரவிசங்கரும் போட்டியின்றித் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கான அறிவிப்பை சட்டப்பேரவையின் இடைக்கால அவைத்தலைவர் திரு. கருப்பையா பேரவையில் இன்று வெளியிட்டார்.

அதனைத் தொடர்ந்து, பேரவைத் தலைவர் மற்றும் துணைத் தலைவருக்கு, முதலமைச்சர் திரு. விஜய் மற்றும் பல்வேறு கட்சிகளின் உறுப்பினர்கள், வாழ்த்து தெரிவித்து அவையில் உரையாற்றினர்.

>>>>>>>><<<<<<<<

ஹிமாச்சலப்பிரதேசம், ஜம்மு கஷ்மீர் மற்றும் லடாக்கின் ஒரு சில பகுதிகளில் இன்று இடியுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

அஸ்ஸாம், மேகாலயா, மேற்குவங்கம் மற்றும் சிக்கிம் மாநிலங்களின் ஒரு சில பகுதிகளிலும் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாப், ஹரியானா, சண்டிகர், பீகார். உத்ராகண்ட் மாநிலங்களின் ஒரு சில பகுதிகளில் 60 கிலோமீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

*உத்தரபிரதேசம், ஜார்க்கண்ட், மேற்குவங்கம், ஒடிசா, கர்நாடகா மற்றும் ஆந்திர மாநிலத்தின் கடலோரப் பகுதிகளில் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*>>>>>>><<<<<<<*

*ஆசிய இளையோர் குத்துச்சண்டை போட்டியில், இந்தியாவின் Rakhi இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.*

*தாஷ்கண்ட்டில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 17 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் 46 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர் சீனாவின் Yating Zhang-ஐ வென்றார்.*

*48 கிலோ எடைப்பிரிவில் Kushi Chand-ம், 57 கிலோ எடைப்பிரிவில் Navya-வும் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.*

*>>>>>>><<<<<<<*

*தாய்லாந்து ஓப்பன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்கியது.*

*>>>>>>><<<<<<<*